## தொழுகையில் வெறுக்கத்தக்கவை مكروهات الصلاة

1. தலையைத் திருப்புவது அல்லது பார்வையை இங்குமங்கும் திருப்புவது. (ஆனால் வானத்தை நோக்குவது ஹராமாகும்) ‘தொழுகையில் தங்கள் பார்வைகளை வானத்தின் பால் நோக்குபவர்களின் பார்வைகளை பறிக்கப்படும்.

(ஆதாரம்:புகாரி)

2. முன்னாலுள்ள சுவர்களையும், சுவற்றிலுள்ள படங்கள், வண்ண நிறங்கள், எழுத்துகள் போன்றவற்றைப் பார்ப்பது.

3. வீண் செயல்கள்,விளையாட்டுகள், தேவையின்றி அசைவது

4. கனமான பொருட்களை தம்முடன் வைத்திருப்பது. கண்ணைப் பறிக்கும் ஈர்த்து நிற்கும் பொருட்களை தம் முன்னால் வைப்பது.

5. இடுப்பில் கைவைத்து நிற்பது போன்றவை.

6. கண்களை மூடிக் கொள்வது.

7. புட்டத்தை தரையில் வைத்து கால்களை விரித்து உட்காருவது. ஸுஜூதிலிருந்து தலையை உயர்த்தினால் நாய் உட்காருவதைப் போல் உடகாராதீர் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா)

8. நோயோ,முறிவோ இன்றி சுவர் மீது சாய்ந்து நிற்பது.

9. ஸுஜூதில் இரு கைகளையும் அகலமாக விரிப்பது.
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:-

‘ஸஜ்தாவில் நடுநிலையைக் கடைபிடியுங்கள்.உங்களில் எவரும் நாய் விரிப்பதைப் போல் கைகளை விரிக்கக்கூடாது. அறிவிப்பவர்:அனஸ்(ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்: புகாரி 822)

10. கை விரல்களை விரித்து மூடுவது (சொடக்கு விடுவது)

11. சிறு நீர், காலைக்கடன், தாகம், பசியை அடக்கிக் கொண்டு தொழுவது.

12. உணவு தயாராக வைக்கப்பட்டிருக்கும் போது தொழுவது.
உணவு தயாராக (உங்கள் முன்) வைக்கப்பட்டிருக்கும் போது தொழுகை கிடையாது. என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளனர்

(ஆதாரம் :ஸஹீஹுல் முஸ்லிம்

(மேலும்) உணவு கொண்டு வைக்கப்பட்ட பிறகு தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் முதலில் உணவைக் கொண்டு ஆரம்பியுங்கள்.

(ஆதாரம்:புகாரி: அறிவிப்பவர்: ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா)

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**